மின்வெளி மீடியா ஒர்க்ஸ்

# கிருஷ்ணவேணி பஞ்சாலை

**ராஜீவ் கிருஷ்ணா, நடிகர்**

''இந்தப் படத்தில் எனக்கு சவாலான முதலாளி கேரக்டர். 80களில் இருந்த பஞ்சாலை மில் முதலாளி மாதிரி கெட்டப். காஸ்டியூம், மேக்கப் எல்லாம் பார்த்துப் பார்த்து செய்திருக்கிறோம். இதுவரை இப்படியொரு பாத்திரத்தில் நான் நடிக்காததால் இந்தப் படம் எனக்கு புது அனுபவமாக இருந்தது. கதையை கேட்கும்போதே 'ஆஹா' படத்துக்குப் பிறகு கிருஷ்ணவேணி பஞ்சாலை எனக்கு திருப்புமுனையாக அமையும் என்ற நம்பிக்கை வந்துவிட்டது. அதனால், கதை கேட்டதும் மறுப்பு சொல்லாமல் சம்மதித்துவிட்டேன். கிருஷ்ணவேணி பஞ்சாலை கோடம்பாக்கத்துக்கு புது ரத்தமாக இருக்கப்போகிறது.''

**சண்முகராஜா, காஸ்டிங் டைரக்டர், நடிகர்**

''தமிழ் சினிமாவில் முதன்முறையாக கிருஷ்ணவேணி பஞ்சாலை படத்தின் மூலமாக இயக்குனர் தனபால் பத்மநாபன் காஸ்டிங் டைரக்டராக என்னை அறிமுகப்படுத்துகிறார். இந்த நல்ல முயற்சி, பலருக்கு வழிகாட்டியாக இருக்கும். சினிமாவுக்காக நடிகர்களுக்கு பயிற்சி அளித்த அனுபவம் எனக்கு புதுசாக இருந்தது. படத்தின் கதைக்கு தகுந்தமாதிரி கதாபாத்திரங்கள் தேர்வில் இயக்குனரின் ஒத்துழைப்பு ரொம்பவே இருந்தது. காஸ்டிங் டைரக்டருக்கு தேவையான எல்லா சுதந்திரத்தையும் எனக்கு கொடுத்தார். இந்தப் படத்தில் காஸ்டிங் டைரக்டராக மட்டுமல்லாமல் நடிகனாகவும் பணியாற்றியது எனக்கு நிறைவாக இருக்கிறது.''

**சுரேஷ் பார்கவ், ஒளிப்பதிவாளர்**

''ரெட் காமிராவில்தான் படம் முழுக்க எடுத்திருக்கிறோம். 80களில் நடக்கிற கதை என்பதால் அந்த டோனை ஒளிப்பதிவில் கொண்டுவரவேண்டும் என்பதற்காக ரொம்ப மெனக்கெட்டு இருக்கிறோம். லைட்டிங், காஸ்ட்யூம் என எல்லா விஷயத்திலும் அதிக கவனம் எடுத்துக்கொண்டு வேலை செய்திருக்கிறேன். ஒரு பாடல் முழுக்க மாண்டேஜ் ஷாட்களாக வைத்திருக்கிறோம். அதனால், அந்தப் பாடலைப் பார்க்கும்போது அவ்வளவு வேகமாகவும் உற்சாகமாகவும் இருக்கும். இது என்னுடைய படம். என்னுடைய படத்தைப் பற்றி நானே அதிகமாக சொல்லக் கூடாது. ரசிகர்கள்தான் சொல்லவேண்டும்.''

**மு.காசிவிஸ்வநாதன், எடிட்டர்**

''இந்தப் படத்தில் எடிட்டராக நான் வேலை செய்ததற்கு ரொம்பவே சந்தோஷப்படுகிறேன். அவ்வளவு நேர்த்தி, கலைநயத்தோடு வந்திருக்கிற படத்தின் காட்சிகளை கோர்த்துப் பார்க்கும்போது எனக்கு கிடைத்த மகிழ்ச்சியே தனிதான். இந்தப் படத்தின் முதல் ரசிகன் நானாக இருப்பதில் எனக்கு பெருமையாக இருக்கிறது. படம் முழுக்க நந்தனாவும் ஹேமச்சந்திரனும் வாழ்ந்திருக்கிறார்கள். அவர்களுடைய நடிப்பு அவ்வளவு இயல்பாக இருக்கிறது. இப்படி சொல்லிக்கொண்டே போகலாம். கிருஷ்ணவேணி பஞ்சாலை இந்த வருடத்தின் சிறந்த படமாக இருக்கும்.''